STC.No.164/2024 PW1.திரு.பிரபு

தேதி– 07.04.2026

எதிரி ஆஜர் இல்லை. BNSS பிரிவு 355–ன் கீழ் மனு கொடுத்து அனுமதிக்கப்பட்டது.

<u>சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எதிரிக்கும், எனக்கும் ஒரே வயது கிடையாது என்றால் தெரியாது. எதிரி என்ன படித்துள்ளார் என்றால் தெரியாது. எதிரிக்கு எத்தனை குழந்தைகள் என்றால் ஒரு குழந்தை உள்ளது. அந்த குழந்தையின் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. நானும், எதிரியும் ஒன்றாக படித்தவர்கள் இல்லை என்றால் சரிதான். நானும், எதிரியும் ஒன்றாக வியாபாரம் செய்யவில்லை என்றால் சரிதான். நானும், எதிரியும் உறவு முறையில் சொந்தம் இல்லை என்றால் சரிதான். நான் எதிரியை எப்போது எங்கு வைத்து பார்த்தேன் என்றால் 3 வருடத்திற்கு முன்பு கேரளாவில் லீசுக்கு தோட்டம் எடுத்து நான் ஏலக்காய்தொழில் செய்யும்போது எதிரி அங்கு சாப்பாடு எடுத்து கொண்டு வருவார்.

2. நான் யாருடைய தோட்டத்தை லீசுக்கு எடுத்தேன் என்றால் ராஜ்குமார் என்பவரின் தோட்டத்தை லீசுக்கு எடுத்தேன். எதிரிக்கு நான் பணம் கொடுத்ததாக சொல்லப்படும் தேதிக்கு முன்பு எப்போது எதிரியை முதலில் பார்த்தேன் என்றால் 1 ½ வருடத்திற்கு முன்பு பார்த்தேன். எதிரியின் பிரதான தொழில் என்னவென்றால் சாப்பாடு கொண்டு வந்து கொடுப்பார். எதிரியின் வருமானம் எவ்வளவு என்றால் மாதம் ரூ.30 ஆயிரம் வரும் என எதிரி கூறினார். எதிரியை நான் எத்தனை முறையில் நேரில் சந்தித்து பேசினேன் என்றால் அதிக முறை பார்த்துள்ளேன். எதிரி எனக்கு எந்த வகையில் பழக்கம் என்று எனது வழக்காவணங்களில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

3. எதிரி என்னிடம் எப்போது பணம் வேண்டுமென்று கேட்டார் என்றால் 05.05.2024 க்கு ஒருவாரத்திற்கு முன்பு பணம் கேட்டார். எதிரி பணம் கேட்டதாக சொல்லப்படும் சமயத்தில் யார் அவருடன் இருந்தார்கள் என்றால் அவரது கணவர்இருந்தார், நான் தனியாக இருந்தேன். எதிரி எங்கு

வைத்து பணம் கேட்டதாக சொல்லுகிறேன் என்றால் குமுளி டீக்கடையில் வைத்து பணம் கேட்டார். குறிப்பிட்டு எந்த கடையில் கேட்டார் என்றால் குமுளி செக்ஸ்போட்டை தாண்டி வலது புறத்தில் உள்ள டீக்கடையில் கேட்டார். பொதுவாக ஒருவர் கடன் கேட்டால் பாதுகாப்பிற்காக ஆவணம் வாங்குவது வழக்கம் என்றால் சரிதான். எனக்கு பிரதான தொழில் என்னவென்றால் கூலி வேலைக்கு செல்கிறேன், முதலில் ஏலக்காய் தொழில் செய்தேன், பணம் நஷ்டம் ஆனதால் தற்போது கூலி வேலைக்கு செல்கிறேன்.

4. நான் எப்போது ஏலக்காய் வியாபாரம் தொழில் செய்தேன் என்றால் 2 வருடத்திற்கு முன்பு செய்தேன். ஏலக்காய் வியாபாரம் செய்யும்போது லீசுக்கு உடன்படிக்கை பத்திரம் ஏற்படுத்திருப்பேன் என்றால் சரிதான். 2024 காலக்கட்டத்தில் உள்ள உடன்படிக்கை பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாரா என்றால் அந்த உடன்படிக்கை ஆவணம் தற்போது இல்லை. நான்சொல்வதுபோல் 2024 ல் ஏலக்காய் வியாபாரம் செய்யவில்லை என்றும், எனது தொழிலானது கூலி வேலைதான் என்றால் சரியல்ல. எதிரிக்கு பணம் கொடுப்பதற்கு முன்பு எதிரியின் குடும்ப விபரங்களை விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். நான் எவ்வாறு காசோலை தொகையை ஏற்பாடு செய்தேன் என்றால் ஏலக்காய் தொழில் வந்த பணத்தை கொடுத்தேன்.

5. நான் ஏலக்காய் வியாபாரம் செய்வதற்கு உரிமம் இல்லை என்றால் சரிதான். நான் எவ்வாறு ஏலக்காய் விற்பனை செய்வேன் என்றால் மொத்தமாக விற்பனை செய்வேன். கேரளாவில் ஏலக்காய் வியாபாரம் செய்யும் அனைவரும் ஏலக்காய் வியாபாரிகள் சங்கத்தில் உறுப்பினராக இருப்பார்கள் என்றால் சரிதான். அதேபோல் நான் அந்த சங்கத்தில் உறுப்பினரா என்றால் இல்லை. ஏலக்காய் வியாபாரிகள் சங்கத்தில் உறுப்பினராக இருந்தால்தான் சட்டப்படி ஏலக்காய் வியாபாரம் செய்ய முடியும் என்றால் சரிதான். ஏலக்காய் கொள்முதல் செய்ததற்கும், விற்பனை செய்ததற்கும் ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்ய தயாரா என்றால் எனது பெயரில் வியாபாரம் செய்யவில்லை, ராஜ்குமார் என்பவரின் பெயரில் வியாபாரம் செய்தேன்.

5. ராஜ்குமார் என்பவரை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்க தயாரா

என்றால் தயார். நான் சொல்வது போல் எந்த வியாபாரம் செய்யவில்லை என்றும், ராஜ்குமார் பெயரில் நான் வியாபாரம் செய்தால் அது சட்டப்படி தவறு என்றால் சரியல்ல. நான் அனுப்பிய அறிவிப்பினை எதிரி வாங்கவில்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.4 ல் உள்ள கையொப்பாமானது எதிரியின் கையொப்பம் இல்லை என்றால் தெரியவில்லை. காசோலையில் உள்ள கையொப்பம் எதிரியுடையது இல்லை என்றால் சரியல்ல, எதிரி என் முன்னிலையில் கையொப்பம் செய்தார். ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.4 ல் உள்ள கையொப்பமானது ஒரே நபரின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். நான் அனுப்பியதாக சொல்லப்படும் அறிவிப்பு எதிரிக்குகிடைக்கவில்லை என்பதால்தான் அவர் முறையாக பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரியல்ல.

6. காசோலையில் உள்ள தேதிகளில் உள்ள 4 மும், தொகைகளில் உள்ள 4 மும் வெவ்வேறாக உள்ள என்றால் சரியல்ல. காசோலையில் ரூ.1 லட்சம் என்று எழுதியுள்ளதை ரூ.4 லட்சம் என்று திருத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது உறவினர் ரவி என்று நபர் உள்ளார் என்றால் இல்லை. எனக்கு ரவி என்ற உறவினர் உள்ளார் என்றும், எதிரி ரவியிடம் பொறுப்பிற்காக கொடுத்த காசோலையை நான் நிரப்பி பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.1 ல் தேதியில் 6 என்பது திருத்தம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல, அழுத்தி எழுதப்பட்டுள்ளது. எதிரி என்னிடம் கடன் வாங்கவில்லை என்றும், காசோலை கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி எனக்கு திருப்பி செலுத்த சட்டப்படியான கடன் இல்லை என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுப்படி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல. வழக்கில் கூறியதுபோல் எதிரிக்கு ரூ.4 லட்சம் கொடுக்கும் அளவிற்கு எனக்கு பொருளாதார வசதி இல்லை என்றால் சரியல்ல. எதிரி ரூ.4 லட்சம் வாங்கும் அளவிற்கு கடன் தேவை இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.04.07 15:29:12 +0530
J.M, F.T.C(M.L),Uthamapalayam